# பழனியாண்டவர் கலித்துறை

சுவடியியலும் பதிப்பியலும் பட்டயப்பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு



ஆய்வாளர்
முனைவர் சி. சதானந்தன்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை-5

ஜூலை - 2011

# பழனியாண்டவர் கலித்துறை

சுவடியியலும் பதிப்பியலும் பட்டயப்பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு

ஆய்வாளர்
முனைவர் **சி. சதானந்தன்**

நெறியாளர்
முனைவர் **ய. மணிகண்டன்**
இணைப்பேராசிரியர்

**தமிழ் இலக்கியத்துறை**
**சென்னைப் பல்கலைக்கழகம்**
**சென்னை-5**

**2011**

சுவடியியலும் பதிப்பியலும்

பட்டயச் சான்றிதழுக்காகச்

சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு

அளிக்கப் பெறும்

எண்: 43011067

**முனைவர் ய. மணிகண்டன்**
இணைப்பேராசிரியர்
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை – 600 005.

# நெறியாளர் சான்றிதழ்

**'பழனியாண்டவர் கலித்துறை'** எனும் தலைப்பிலான ஓலைச்சுவடியைச் **'சுவடியியலும் பதிப்பியலும்'** எனும் பட்டயம் பெறுவதற்காக முனைவர் **சி. சதானந்தன்** அவர்கள் என் மேற்பார்வையில் பதிப்புச் செய்தார் என்றும் இப்பதிப்பு இவர்தம் தனி முயற்சியில் உருவானது என்றும் சான்றளிக்கிறேன்.

நெறியாளர்

**(முனைவர் ய. மணிகண்டன்)**

**நாள்:**
**இடம்: சென்னை – 5.**

முனைவர் சி. சதானந்தன்
ஆய்வாளர்
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை – 600 005.

# ஆய்வாளர் உறுதிமொழி

'**சுவடியியலும் பதிப்பியலும்**' என்னும் பட்டயப் பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பெறும் '**பழனியாண்டவர் கலித்துறை**' எனும் தலைப்பிலான பதிப்பேடு என் தனி முயற்சியில் உருவானது என்று உறுதியளிக்கிறேன்.

ஆய்வாளர்

**(சி. சதானந்தன்)**

நாள்:
இடம்: சென்னை – 5.

# நன்றியுரை

உலகினுக்கு என்னை அறிமுகப்படுத்தி இந்நிலைக்கு உயர்த்திய என் பெற்றோர்க்கு முதற்கண் அன்பு கலந்த வணக்கத்தையும் நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறேன். சுவடியியல் பட்டயப் படிப்பிற்கு அனுமதி அளித்து வழிகாட்டிய சென்னைப் பல்கலைக் கழக இலக்கியத் துறைத் தலைவர் முனைவர் வீ. அரசு அவர்களுக்கும், பழனியாண்டவர் கலித்துறை என்னும் இப்பதிப்பேட்டை உருவாக்க யாப்புக் கற்பித்து நெறிகாட்டிய நெறியாளர் முனைவர் ய. மணிகண்டன் அவர்களுக்கும் மற்றும் இலக்கியத்துறைப் பேராசிரியப் பெருமக்களனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியினை உரித்தாக்குகிறேன்.

ஓலைச்சுவடி, தாள்சுவடி ஆகியனவற்றைப் பார்ப்பதற்கும் ஒளி நகல் எடுப்பதற்கும் தெரிவு செய்வதற்கும் உதவிபுரிந்த அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூல்நிலைய காப்பாட்சியாளர் அவர்களுக்கும் பணியாளர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூற் பதிப்பின் போது எழுந்த சந்தேகங்களுக்கு உரிய விளக்கமளித்தும் என் வாழ்வினுக்கு வழிகாட்டியாய்த் திகழ்ந்தும்வரும் மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் இரா. கண்ணன் அவர்களுக்கும் என் செயல் களனைத்திற்கும் என்றும் ஊக்கமளித்து உறுதுணையாய்த் திகழ்ந்து வரும் என்குடும்பத்தினர்க்கும் நன்றி கூறக்

கடப்பாடுடையேன். சுவடியியல் பட்டய வகுப்பில் வேண்டிய உதவிகளைச் செய்துதவிய சகோதரி பி. மாலதி அவர்களுக்கும் நன்றி. இந்நூலைச் சிறந்த முறையில் தட்டச்சுச் செய்து நூல் உருவாக்கம் செய்த **அன்னை வரைகலை** அ.சுபாஷ் அவர்களுக்கு மனமார்ந்த நன்றி.

**முனைவர் சி.சதானந்தன்**

# பதிப்புரை

உலக மொழிகளுள் தனித்தன்மையுடையதாய்ச் செம்மையுடைய தாய்ச் செம்மொழியாய்த் திகழும் பெற்றியுடையத் தமிழ்மொழி எண்ணிறந்த இலக்கிய வளங்களையும் இலக்கண வளங்களையும் தன்னகத்தே கொண்டது. பயிலுந்தோறும் எண்ணுந்தோறும் இனிமை பயக்கவல்ல இலக்கிய வளங்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முன்னர் தொடங்கித் தமிழில் இயற்றப்பட்டு வந்துள்ளன. தத்தம் காலத்துப் பண்பாடுகளையும் பழக்க வழக்கங்களையும் நம்பிக்கைகளையும் வாழ்வியல் முறைகளையும் வெளிக்காட்டும் வண்ணம் அவை அமைந்துள்ளன.

தமிழர்தம் பண்பாட்டுக் கருவூலங்களாய் விளங்கும் இலக்கியங்கள், சங்க காலந்தொட்டு அக்காலத்தில் எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்டுவந்த ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்டன. காலந்தோறும் அவை படிப்போரால் பாதுகாக்கப்பட்டும் புதிய சுவடிகளில் பெயர்த்தெழுதப்பட்டும் வந்தன. வாரெழுத்தாணி, மடக்கெழுத்தாணி, குண்டெழுத்தாணி எனப் பல்வேறு எழுத்தாணிகளைக் கொண்டு பனையோலைகளில் பாடல்கள் எழுதப்பட்டு வந்தன. காகிதமும் அச்சியந்திரமும் தோன்றி உலகில் அச்சுக்கலை வளர்ந்த பிறகு ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வந்த இலக்கியங்கள் ஒவ்வொன்றாகத் தமிழ்ச் சான்றோர்தம் அரும்பெருந் தொண்டினால் அச்சுவாகனம் ஏறியது.

இயற்கையாலும் தெள்ளுப் பூச்சியாலும் கரையானாலும் மாந்தர்தம் அறியாமையாலும் மூட நம்பிக்கையாலும் அரசியல் மாற்றங்களினாலும் அழிந்த இலக்கியச் செல்வங்கள் போக எஞ்சிய செல்வங்களையாவது பாதுகாக்க வேண்டும் அவற்றை அச்சு வாகனமேற்றி இறவாத் தன்மையதாக்க வேண்டும் என்னும் சீரிய எண்ணத்தினால் தமிழரின் பெருமையை வாழ்வியல் முறைகளைப் பண்பாட்டுச் சின்னங்களைப் பறைசாற்றும் காப்பியங்களை உ.வே. சாமிநாதய்யர் சொல்லொணாத் துயரத்தைத் தாங்கிப் பதிப்பித்தார். அவர்தம் சமகாலத்துத் தமிழ்ச் சான்றோரான சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்களும் பன்னூல்களைச் சிரமங்களைக் கண்ணோக்காது பதிப்பித்தார். இச்சான்றோர்களைத் தொடர்ந்து காலந்தோறும் பற்பல தமிழ் அறிஞர்கள் பதிப்புப்பணியைத் தொடர்ந்து வருகின்றனர்.

பல்கலைக் கழகங்கள் சுவடிபுலம் என்றொரு துறையை நிறுவி தமிழ் மாணாக்கர்களுக்குச் சுவடி வாசிப்புக் கலையைப் பயிற்றுவித்து இன்றுகாறும் அச்சியந்திரம் ஏறாத சுவடிகளை அச்சுவாகனமேற்றிப் பதிப்பித்தல் பணியைத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. அவ்வகையில் "**பழனியாண்டவர் கலித்துறை**" என்னும் ஓலைச்சுவடி, சென்னைப் பல்கலைக்கழக இலக்கியத் துறையில், '**சுவடியியலும் பதிப்பியலும்** ' என்னும் பட்டயப் பேற்றிற்காக இதன்கண் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

**பழனியாண்டவர் கலித்துறை – ஓலைச்சுவடி**

பழனியாண்டவர் கலித்துறை என்னும் இந்நூல் சென்னைப் பல்கலைக்கழகக் கீழ்த்திசை ஓலைச்சுவடி

நூல்நிலையத்தில் கண்டெடுக்கப்பட்டது. ஓலைச்சுவடி எண் R.NO:5124, T.R.NO:2256 என்பதாகும். ஓலை நல்ல நிலையில் உள்ளது. இச் சுவடிக்கட்டில் பழனியாண்டவர் கலித்துறை மற்றும் பழனியாண்டவர் குருவிருத்தம் என்னும் இரண்டு நூல்களும் உள்ளன. முதல் ஓலையின் வலப்புறத்தில் "பழனியாண்டவர் பேரில் கலித்துறை, அழகிய சிற்றம்பலக் கவிராயர், குண்ணக்குடி" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆசிரியர் குறிப்புக் காணப்படவில்லை. சுவடியின் இரண்டு பக்கங்களிலும் பாடல்கள் எழுதப்பட்டுள்ளன. ஒவ்வொரு பக்கத்திலும் இரண்டு பாடல்கள் எழுதப்பட்டுள்ளன. அடி பிறழாது சீரிய முறையில் எழுதப்பட்டுள்ளது. பாடல்களின் கீழே தமிழ் எண்களால் தொடர் எண்களிடப்பட்டுள்ளன. 100 பாடல்கள் இந்நூலின்கண் அமைந்துள்ளன. பாடல்களனைத்தும் 'செகண்டி மலைக்கந்தனே' என்று முடிந்துள்ளன. இச்சுவடி மூல நூலைப் பார்த்துச் சுவடி எழுதுவோரால் எழுதப்பட்டுள்ளதாக அமைந்திருக்க வேண்டும் எனத் துணிய முடிகிறது. எவ்வாறெனில் பாடல்கள் அடி பிறழாது எழுதப்பட்டிருத்தலும் பிழைகள் சற்று இருத்தலையும் கொண்டு துணிய முடிகிறது. நூலாசிரியர் நுண்மான் நுழைபுலம் கொண்டவராகவும் பிற்காலப் புலவராகவும் சைவ சமயத்தைச் சார்ந்தவராகவும் முருகனின் மீது மிகுந்த பக்தி கொண்டவராகவும் இருந்திருத்தலை இந்நூல் வழி உணர முடிகிறது.

குன்றுதோறாடி வரும் முருகப் பெருமானின் புகழைப் பாடுவதாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூல் குறித்த குறிப்பு அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலக மூவருட தமிழ்ச் சுவடி விளக்க அட்டவணையில், (தொகுதி–12, பகுதி–2) "இந்நூல்,

சிகண்டி மலை மீது கோயில் கொண்டுள்ள கந்தனைப் பற்றிய தோத்திரமாகப் பாடப்பட்ட பாடல்களைக் கொண்டது. அழகிய சிற்றம்பலக் கவிராயர் என்பவரால் பாடப்பட்டுள்ளது. இவர் மிதிலைப்பட்டி என்னும் ஊரினைச் சேர்ந்தவர். நிறைந்த புலமையுடையவர். சிகண்டி என்பது குன்றக்குடி மலைக்கு ஒரு பெயராகும். நடை நன்றாவுள்ளது"★ என்று காணப்படுகிறது. குன்றக்குடி, இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த திருப்பத்தூருக்கு அண்மையிலுள்ளது. முருகனின் ஊர்தியான மயில், மலை வடிவமாக அமைந்துள்ளது என்று புராண நூல்கள் கூறுகின்றன. குன்றக்குடியில் உள்ள மலைக்கு 'மலைமயில்' எனவும் 'சிகண்டிமலை' யெனவும் வழங்கப்படுகிறது.

இந்நூலின் ஈற்றடிகளனைத்திலும் "செகண்டி மலைக்கந்தனே" என முடிவதால் சிகண்டிமலை என்பது செகண்டி மலையென மருவி வந்துள்ளது எனத் துணியலாம். நூலாசிரியரின் ஊரான மிதிலைப்பட்டி குன்றக்குடிக்கு அருகமர்ந்த ஊராகும்.

**கட்டளைக் கலித்துறை**

தமிழ்ப்பா வடிவங்களுள் ஒன்றான கலிப்பா தனக்குரிய அடிப்படை இலக்கணங்களில் முற்றிலும் மாறுபட்டு எழுத்தெண்ணிக்கை பெற்றும், வெண்டளை பெற்றும் கட்டளைக் கலிப்பா எனும் ஒரு வகையாகப் புதிய பரிணாமம் பெற்றுக் காணப்படுகின்றது. இதில் கலிப்பாவின் உறுப்புகளான

---

★ அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், மூவருட தமிழ்ச்சுவடி விளக்க அட்டவணை தொகுதி–12, பகுதி–2, ப. 4455.

தனிச்சொல், சுரிதகம், அராகம், அம்போதரங்கம் போன்றவையும் கலித்தளை அருகியும் வருகின்றன. எழுத்தெண்ணிப் பாடும் மரபில் பெருவழக்காகக் கையாளப்படுகின்ற கட்டளைக் கலித்துறைக்கு அடுத்த நிலையில் கட்டளைக் கலிப்பா பயன்பாட்டில் உள்ளது. தொல்காப்பியம் தொடங்கி யாப்பருங்கல விருத்தியுரை வரையிலான வரலாற்றில் இப்பாவகை எடுத்தாளப்படவில்லை. தொல்காப்பியத்திற்கு உரை வரைந்த நச்சினார்க்கினியர் கட்டளைக் கலிப்பாவிற்கான வரையறையைத் தமது உரையில் கூறியுள்ளார்.

யாப்பருங்கலத்திற்கு அடுத்ததாகத் தோன்றிய யாப்பருங் கலக்காரிகையிலும் இப்பாவகை பற்றிப் பேசப்படவில்லை. ஆனால் ந.மு. வேங்கடசாமி பதிப்பில் கட்டளைக் கலிப்பா பிற்காலத்தே பயின்று வழங்கும் தன்மையால் பிற்சேர்க்கையில் இலக்கணம் கூறப்பட்டுள்ளதாக மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

பிற்கால யாப்பிலக்கண நூல்களான இலக்கணச் சூடாமணி, தொன்னூல் விளக்கம், அறுவகை இலக்கணம், செய்யுள் இலக்கணம், யாப்பதிகாரம், தொடையதிகாரம், யாப்பிலக்கணம், யாப்பு நூல், விருத்தப்பாவியல், கவிஞராக, கவிபாடலாம், எளிதாகப் பாடலாம், பாவலர் பண்ணை, தென்னூல், யாப்பரங்கம், பழகுதமிழ்ப் பாட்டெழுதும் பாங்கு, யாப்பறிந்து பாப்புனைய ஆகியன கட்டளைக் கலிப்பாவின் இலக்கணத்தை எடுத்தியம்புகின்றன. மேலும் யாப்புச் சார்ந்த இலக்கியமான பல்சந்தப் பரிமளமும் இப்பாவினைப் பற்றிக் குறிப்பிடுகின்றது.

## காலந்தோறும் கட்டளைக்கலித்துறை இலக்கணம்

### திவாகரம்

> ***அழகும் அழகுடை மாதரும், அதனொடு***
> ***கட்டளைக் கலித்துறையும் காரிகை எனப்படும்" (1941)***

### யாப்பருங்கல விருத்தியுரை

'குமரசேனாசிரியர் கோவையும், தமிழ் முத்தரையர் கோவையும் யாப்பருங்கலக் காரிகையும் போன்ற சந்தத்தால் வருவனவற்றின் முதற்கண் நிரையசைவரின், ஓரடி பதினேழெழுத்தாம். முதற்கண் நேரசைவரின் ஓரடி பதினாறெழுத்தாம். இவ்வாறன்றி மிக்கும் குறைந்தும் வாரா. அவை எண்ணுகின்றுழி ஆய்தமும் ஒற்றும் ஒழித்து, உயிரும் உயிர்மெய்யும் குற்றியலிகரமும் குற்றியலுகரமும் கொண்டு எண்ணப்படும். என்னை?

**நேரிசை வெண்பா**

> **எழுவாய் நிரைவரினாம் ஏழுடைய ஈரைந்**
> **தெழுவாய் தனிவரினொன் றெஞ்சும் - வழுவாத**
> **கோவையும் செய்யுட்கால் குன்றா பெருகாவென்**
> **றேவினார் தொல்லோர் எழுத்து.**

என்பவாகலின்." (ஒழிபியல், நூ.95 இன் உரை)

### யாப்பருங்கலக் காரிகை – குணசாகரர் உரை

"நேரசை முதலாகிய காரிகை ஒற்றொழித்து ஓரடிக் கெழுத்துப் பதினாறும், நிரையசை முதலாகிய காரிகை ஒற்றொழித்து ஓரடிக் கெழுத்துப் பதினேழுமெனக் கொள்க.

என்னை,

**அடியடி தோறும் ஐஞ்சீ ராகி**
**முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாக்**
**கடைஒரு சீரும் விளங்காய் ஆகி**
**நேர்பதி னாறே நிரைபதி னேழென்று**
**ஓதினர் கலித்துறை ஓரடிக் கெழுத்தே.**

என்றாராகலின்." (காரிகை–1 இன் உரை)

## வீரசோழியமும் பெருந்தேவனார் உரையும் (பழம்பதிப்பின் அடிக்குறிப்புடன்)

**நெடிலடி நான்கவை நேர்ந்துநின் றேபதி னாறெழுத்தாய்**
**முடிவன வாம்பதி னேழு நிரைவரின் முன்மொழிந்த**
**படிவழு வாது நடைபெறு மோசைவண் டேந்திநின்ற**
**கடிகமழ் கோதைக் கயனெடுங் கண்ணி! கலித்துறையே.**

(இ–ள்.) இதனைக் கோவைக் கலித்துறைக்கு இலக்கணமும் இலக்கியமுமாகக் கொள்க. (யாப்புப்படலம். 18)

**நேர்முந் துறிற்பதி னாறெழுத் தாகி நிரைமுதலாஞ்**
**சீர்முந் துறிற்பதி னேழாய் முடிந்துசெப் பாரடிகள்**
**ஏர்முந்து நான்கொத் திருபது சீரா லியன்றிடுமேல்**
**தேர்முந்து பேரல்குன் மாதே! அஃது திலதமன்றே.**

(இ–ள்.) நேரசை முந்திற் பதினாறு எழுத்தாய், நிரையசை முந்திற் பதினேழ் எழுத்தாய் முடியும் பாதங்கள் நாலாய்ச் சீர் இருபதினால் வருவது திலதமென்னும் பெயராலே வழங்கப்படும் (எ–று.) இந்நூற்சூத்திரம் யாவுந் திலதமாதலின் இதனில் ஒன்றையே இலக்கியமாகக் கொண்டாலும் இழுக்காது." (128)

**பதிப்பாசிரியர் சி.வை.தாவின் அடிக்குறிப்பு**

"கலித்துறை, கட்டளைக்கலித்துறை எனவும், காப்பியக் கலித்துறை எனவும் இருவகைப்படும். அவற்றுட் கட்டளைக் கலித்துறை, கோவைக் கலித்துறை எனவும் திலதக் கலித்துறை எனவும் இரண்டு வகையாகும். இவை தம்முட் பேதமறியாது பெரும்பாலோர் ஒன்றை ஒன்றாக்கி மயங்குப. இவற்றை வேறுபடுத்துவான் தொடங்கி நூலாசிரியர், 'நெடிலடி' என முன்னர்ப்போந்த சூத்திரத்தாற் கோவைக் கலித்துறையையும், இச்சூத்திரத்தால் திலதக் கலித்துறையையும் உணர்த்தியும், உரையாசிரியர் அவருடைய கருத்துத் தெரியாது ஆண்டுக் குற்றங்காட்டுதற்கு எடுத்தோதினார் என மயங்கி, 'நெடிலடி' என்னுஞ் சூத்திரத்தையே 'கோவைக் கலித்துறைக்கு இலக்கணமும் இலக்கியமுமாகக் கொள்க' என்றார். அச்சூத்திரமுந் திலதக் கலித்துறையேயாம். அஃது 'கடிகமழ் கோதை நல்லாய்பன்னு கோவைக் கலித்துறையே' என்று இற்றவழியன்றோ கோவைக் கலித்துறையாகும்! கோவைக் கலித்துறை ஈற்றடி மூன்றாஞ் சீர்ச்சொல் பக்குவிட்டு முற்சீரோடு ஒன்றி ஒழுகிய ஓசைத்தாய் வரும். இது பேதமறிக. இரண்டாஞ்சீர் நாலாஞ்சீர்களும் அவ்வாறோசை பிரிந்தொழுகின் மிக்க சிறப்புடையதாம். அதனை 'நீரணங் கோநெஞ்ச மேதனி யேயிங்கு நின்றவரே' என்னும் பொய்யாமொழிப் புலவர் வாக்கானுணர்க".

**நச்சினார்க்கினியரின் தொல்காப்பிய உரை**

***உயிரில் எழுத்தும் எண்ணப் படாஅ***
***உயிர்த்திறம் இயக்கம் இன்மை யான.***

இஃது எய்தியது விலக்கிற்கு.

(இ–ள்.) உயிரில் எழுத்தும் எண்ணப்படாஅ – ஒற்றும் ஆய்தமும் குற்றுகரமும் எழுத்தெனப் பெயர் கூறினாரேனும் எழுத்தாக எண்ணப்படா; என்னை? உயிர்த்திறம் இயக்கம் இன்மையான – அவை தத்தம் ஓசை இனிது விளங்க ஒலித்தற்குக் கூறிய எண்வகை நிலத்தினும் விளங்க இயங்காமையின் எ–று.

என்றது, எழுத்தெண்ணுமிடத்து அவை ஒழித்தெண்ணுக என்றவாறு. இது கட்டளையடிக்குப் 'பேர்ந்து சென்று' என்பதனுள் அவையொழித்து எண்ணப்பட்டது. பின்னுள்ளோர் கொண்ட கட்டளைக் கலித்துறை, சந்தம், தாண்டகங்கட்கும் இவ்வா றெழுத்தெண்ணுதல் வேண்டுமென்றுணர்க."

(தொல்காப்பியம், செய்யுளியல், நூ. 44 இன் உரை)

**சிதம்பரப் பாட்டியல் – மூலமும் உரையும் & அவிநய நூற்பெயரால் அமைந்த நூற்பாக்கள்**

***"...ஒற்றெண்ணா(து)***
***அறைஅடிநேர் பதினாறு நிரைபதினேழ் எழுத்தாய்***
***அடிநான்கு தொறும்வரில்கட் டளைக்கலித் துறையே.."*** (15)

**உரை**

"ஒற்றெண்ணா(து) அறைஅடி... கலித்துறையே" எ–து, நாலடியாய் அடிதோறும் ஒற்று எண்ணாமல் உயிரும் உயிர்மெய்யும் எண்ணில் ஆதியிலே நேரசை வந்தாற் பதினாறெழுத்தும் நிரையசை வந்தாற் பதினேழெழுத்தும் உடையதாய் வருவது கட்டளைக் கலித்துறை.

"கட்டளைக் கலித்துறை கலித்துறைப் பாற்படும்"
"நேரசை யெனவு நிரையசை யெனவும்
ஆயிரு பெயரா னடக்குமன் னவையே"

என்னும் அவிநயத்துட் கண்டுகொள்க. (நூ. 15 இன் உரை)

## இலக்கணச் சூடாமணி

"அடியள வில்லா தளவொத்தும் தன்சீர்
கடையடிமிக் கெய்தல் கலியின் - இடைநிலையாம்
ஐஞ்சீ ரடிநான் கடைதல் கலித்துறையாம்
எஞ்சா விகற்பம் இசைந்து." (37)

"பதினறுபன் னேழெழுத்தாய்ப் பண்புறுசீர் ஐந்தாய்க்
கதிபெறுமோர் மோனை கடையாய் - விதிவகையின்
நேர்நிரையும் மற்றும் நெடிலடியும் காப்பியத்தின்
பேர்நிலையும் எய்தும் பிற" (38)

## தொன்னூல் விளக்கம்

"கலித்துறை நெடிலடி நான்கொத் தவற்றுள்
இடைநேர் வெண்சீர் இயற்சீர் முதல்நான்கு
இடைநிரை வெண்சீர் இறுதிச்சீர் மோனையாய்க்
கடையே கொண்டிறுங் கட்டளைக் கலித்துறை"

(தொன்னூல் விளக்கம் 241)

## செந்தமிழ்

"Of this kind of metre, the variety termed கலித்துறை is the only one which is much used and esteemed; to it, therefore, I shall confine my remarks. This kind of stanza consists of four lines under one எதுகை; and always takes ஏ at its close. Each

line has five feet, of which the first four must be among these six, தேமா, புளிமா, கருவிளம், கூவிளம், தேமாங்காய், புளிமாங்காய். The fifth feet should invariably be either a கருவிளங்காய் Or a கூவிளங்காய். On this Foot, the consonance மோனை ought to fall; and this is indispendable to the beauty of the line, even though there be a மோனை on some other foot. The connexion of the feet can only be that termed வெண்டளை; which, however, does not here, as it invariably must with the வெண்பா, affect the commencement of one line with reference to the ending of that which precedes it; but only regards each, individually considered; thence, although the lines in this metre must end in a காய், they need not therefore commence with a நேரசை.

This metre is distinguished into two variaties, depending on the number of syllables in the line. If the stanza begins with a syllable, long either by nature or by prosody, each அடி will contain sixteen syllables; and the stanza is termed நேரசைக் கலித்துறை. If the stanza begins with a short syllable, each அடி will contain seventeen syllables and the stanza is then termed நிரையசைக் கலித்துறை These two varieties are commonly termed நேர்பதினாறு and நிரைபதினேழு. If the line contain only the feet above mentioned, and the வெண்டளை be observed, it will necessarily consist of one or other of these two numbers of syllables. The கலித்துறை then, like the வெண்பா admits no deviation from the rules prescribed for its construction; both these

kinds of metre are therefore, difficult; but they are held in proportionate esteem. I subjoin, by way of example, a நிரையசைக் கலித்துறை, one of seventeen syllables, in which I have comprised all the foregoing rules:

"இடையேநேர் வெண்சீ ரியற்சீர் வருமுத லீரிருசீர்
கடையே இடைநிரை வெண்சீராய் வெண்டளைக் காத்தடிநான்
குடையே கடையாக் கடைமோனை நான்கடி யோரேதுகை
நடையே கலித்துறை யாமெனக் கற்றோர் நவின்றனரே."

(தொன்னூல் விளக்கம் – யாப்பதிகாரம் – நூ. 241 இன் உரை செந்தமிழ், பக். 138,139)

சுவாமிநாதம்

" .... .... .... .... நான்கு
அடிநெடிலும் அதிற்பன்னேழ் பன்னாறுஎண் முடிவுங்
களவற்ற கலித்துறை" (நூ. 160)

அறுவகை இலக்கணம்

"ஈரசை மூன்றசைச் சொற்கள் மிக்கணைந்தும்
ஒவ்வோ ரீற்றில் தேமாந் தண்பூப்
புளிமாந் தண்பூப் புணர்ந்தும் ஐஞ்சீர்
ஆவதோர் அடியாய் நாலடி யுடைத்தாய்
ஈற்றில் ஏயென முடிவது கட்டளைக்
கலித்துறை யாம்எனக் கழறுதல் முறையே." (432)

"நேரெனத் துவக்கலும் நிரையென எடுத்தலும்
ஆய கட்டளைக் கலித்துறைக்கு இடைவரும்
மெய்தவி ரெழுத்தின் தொகைபதி னாறும்

அவற்றொடு ஒன்றணு கலும்ஆ மெனப்பகரினுஞ்
சுவையறி வில்லாத் துகளுறு மனத்தினர்
நெடில்குறில் அமைவுறும் நிலைபிறழ்வ அதனால்
கீழ்மை தோய்வுறக் கிளத்தலும் உளவே." (433)

"கட்டளைக் கலித்துறை கலிநிலைத் துறைஎனும்
இவற்றின் மோனைக்கு ஈற்றுச் சீர்இசைவு
என்றுபல் புலவோர் இயம்பினர் அன்றே." (435)
"விருத்தப் பாநிலை தேறுமுன் கட்டளைக்
கலித்துறை ஆதிய கழறுதல் பிழையே." (569)

## ஏழாம் இலக்கணம்

"கட்டளைக் கலித்துறை கட்டுங் காவலும்
போலள வமைதலிற் புரவலர் மகளே." (யாப்பியல்பு - 6)

## செய்யுளிலக்கணம்

"முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாமல் கடையொருசீர் பெரும்பான்மை விளங்காயாகி வருமைஞ்சீரடி நான்குகொண்டு முடிவது ஓரடிக்கெழுத்து முதலசை நேராயின் பதினாறும் நிரையாயின் பதினேழுமாம்.

## நேரசைக் கட்டளைக்கலித்துறை

செவ்வாய்க் கருங்கட்பைந் தோகைக்கும் வெண்மதிச் சென்னியற்கு
மொவ்வாத் திருவுரு வொன்றே யுளதவ் வுருவினைமற்
றெவ்வாச் சியமென் றெடுத்திசைப் பேமின் னருட்புலியூர்ப்
பைவாய்ப் பொறியர வல்குநெந் தாயென்று பாடுதுமே.

**நிரையசைக் கட்டளைக்கலித்துறை**

**கரும்புஞ் சுரும்பு மரும்பும் பொரும்படைக் காமர்வில்வேள்**
**இரும்புங் கரைந்துரு கச்செய்யு மாலிறும் பூதிதன்றே**
**விரும்பும் பெரும்புலி யூரெம்பி ரானருண் மேவிலொரு**
**துரும்பும் படைத்தழிக் கும்மகி லாண்டத் தொகுதியையே.**

இக்கலித்துறைகள் கோவைக் கலித்துறையென்றும், திலதக் கலித்துறையென்று மிருவகையாம். மேற்காட்டிய இரண்டு செய்யுளுக்கும் கோவைக் கலித்துறைகளில், திலதக் கலித்துறையாவது ஈற்றடியிலுள்ள மூன்றாம் இரண்டாஞ் சீராகத் தம்மிலேயாதல் தமது அயற்சீர்களோடாதல் ஓசை பிரிந்து மொழி பக்குவிட்டுப் பக்குவிட்ட மொழி முதற் சீரோடொன்றி ஒழுகிய ஓசைத்தாகிய சிறப்பினையுடைத்தாய் வருவது.

**வண்கொடி யேய்மதின் மாறைவ ரோதயன் வாணனொன்னார்**
**எண்கொடி யேனெய்த வில்வண்ண நீயிரங் கேலிரங்கேல்**
**நுண்கொடி யேகிடை வண்டிமிர் பூங்குழ லூரபுரத்தாட்**
**பெண்கொடி யேபிரி யேன்றி யேன்நிற் பிரியலுமே.**

சிறுபாண்மை கட்டளைக் கலித்துறைகளின் அடிகளில் கடையொரு கனிச்சீரும் வரப்பெறும்.

(உ—ம்)

**"இனித்த முடைய வெடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்"**
**"கயிலைச் சிலம்பிற் பைம்பூம் புனங்காக்குங் கருங்கட்செவ்வாய்"**
**"அன்றதென் னாரள்ளற் பள்ளத்தி னோடங்கண் வானத்துமே"**
**"கள்ளக் கயலு மிராசியின் மீனங் கடைப்பட்டதே"**

ஒற்றைத் தள்ளி விளங்காயாகக் கொள்ளலாமெனின் தன்ன தய்ய - சந்தங்களைத் தனச் சந்தமாக்கி அங்ஙனங் கொள்ளலா மேயன்றித் - தத்த - சந்தத்தைக் கொள்ளுதல் யாண்டைய தென்பதாம். (பக். 32, 33).

**யாப்புநூல்**

***"கலித்துறைச் சீர்களில் ஈரசை முரண்தளை***
***பொலியத் தோன்றின் கட்டளைக் கலித்துறை***
***(ஐந்தாம் மூவசைச் சீர்தளை நோக்கில்) (126)***

**பொருளுரை:** (கட்டளைக்)கலித்துறைப் பாடலின் சீர்களில் ஈரசை முரண்தளை அழகுபடத் தோன்றின் கட்டளைக் கலித்துறையாம். ஐந்தாவதாக வரும் மூவசைச்சீர் தளை நோக்கிற்குட்படா.

**விரிவுரை:** வெண்டளைக் கட்டுப்பாடுடைய சிந்துப்பாக்களில் தனிச்சொல்லுக்கு முன்னும் பின்னும் தளை பார்க்காதவாறு போல் கட்டளைக் கலித்துறையிலும் ஐந்தாஞ் சீர்க்குப் பிந்திய சந்தியில் தளை பாராமை கொள்க. கோவைப்பாடல் முற்றும் இவ்வாறு அமையும்.

**அடிதொறும் மெய்யொற் றன்றி எண்ணின்**
**நிரைமுத லாயின் பதினே ழெழுத்தும்**
**நேர்முத லாயின் பதினா றெழுத்தும்**
**அமைதல் அளவாம் வினைத்தொகை போன்றே.**

**(யாப்புநூல். 127)**

**பொருளுரை:** கட்டளைக் கலித்துறையில் அடிகள் தோறும் மெய் ஒற்றுகளை விட்டு, எண்ணினால் நிரை முதலான அடிக்குப் பதினேழு எழுத்தும் நேர் முதலான அடிக்குப் பதினாறு எழுத்தும்

அமைந்து வருதல் அளவாகும். இஃது ஒருவகையில் வினைத்தொகையை ஒத்தது."

**யாப்புநூல் – ஆள் அடைவு**

**"சரள நடையால் தரள மாகக்**
**கட்டளைக் கலித்துறை பட்டினத் தாரால்**
**அமைந்தது மேலும் சமைந்தநல் வரிசை**
**தஞ்சை வாணனொடு, கரந்தை திருக்கோவை**
**கந்தர் அலங்காரம், அபிராமி அந்தாதி."**

**தென்னூல்**

**"நெடிலடி நான்காய் நிகழும் கலித்துறை**
**முதற்சீர் நான்கும் வெண்டளை யாகக்**
**கடைச்சீர் விளங்கா யாகி முதலசை**
**நேர்பதி னாறே நிரைபதி னேழெழுத்து**
**அடிதொறும் வரினது கட்டளைக் கலித்துறை**
**தளைதப்பின் திலதக் கலித்துறை என்ப."★**

(தென்னூல் இலக்கியப்படலம். நூ. 447)

மேற்கண்ட கட்டளைக்கலித்துறை யாப்பிலக்கணங்களின் அடிப்படையில் கீழ்க்காணும் வகையில் இந்நூல் நோக்கப்பட்டுச் சீர்ப்பிரித்துப் பதிப்பிக்கப்பட்டது.

- நான்கடி ஐஞ்சீராய் வரும்.
- முதல் நான்கு சீரும் தேமா, புளிமா, கருவிளம், கூவிளம், தேமாங்காய், புளிமாங்காய் என அமைந்து வெண்டளைப் பெற்று வரும்.

---

★ சி.வை. தாமோதரம்பிள்ளை இயற்றிய கட்டளைக் கலித்துறை (இலக்கண நூல்), ய. மணிகண்டன், பக். 72–81

- இறுதிச்சீர் (ஐந்தாம் சீர்) கருவிளங்காய், கூவிளங்காய் எனப்பெரும்பான்மையும் சிறுபான்மை தேமாந்தண்பூ, புளிமாந்தண்பூ, தேமாங்கனி, புளிமாங்கனி எனவும் அமையும்.
- ஒற்று நீங்கலாக நேர் முதலில் அமையின் 16 எழுத்தும் நிரை முதலில் அமையின் 17 எழுத்தும் அமையும்.

## பழனியாண்டவர் கலித்துறை

சிகண்டி மலையின்கண் வாழும் பழனியாண்டவர் மீது பாடப்பெறும் இந்நூல் முருகப்பெருமானின் பெருமைகளையும் திரு அவதாரச் சிறப்புகளையும் பாடுவதாக அமைந்துள்ளது. முருகப்பெருமான் விண்புவி அனைத்திலும் நீக்கமற நிலைபெற்றுச் சச்சிதானந்தமாய் நின்றுள்ளார் என்பதை,

**"மஞ்சுல வும்விண் ணதிரந டஞ்செய்யு மாமயிலா" (2)**

**"வானத் தளாவுஞ் சிகரச் செகண்டி மலைக்கந்தனே" (3)**

**"புரந்தரன் போற்றும் புனிதா குகாவிண் புவியனைத்தும்**
**நிரந்தர மாய்ச்சச் சிதானந்த மாயெங்கு நின்றையனே" (14)**

**"........................ விண்ணிற் றோய்ந்துவளர்**
**மதிக்கு நிகழும் வதனா செகண்டி மலைக்கந்தனே" (29)**

என்னும் அடிகளின் வழிக் காணமுடிகிறது.

சிவனின் அருட்செயல்களையும் திருமாலின் அருட் செயல்களையும் போற்றிப் புகழ்ந்து கூறிச் சிவபெருமானின் மகனாகத் திருமாலின் மருகனாக முருகப்பெருமான் விளங்கும் தன்மையை,

**“திண்ண மிகுந்த திரிபுரந் தன்னைச் சிரித்தெரித்த**
**தண்ண மிகுந்த மதிச்சடை நாதன் தருபுதல்வா”(5)**

**“கையிலாளி யேந்திய மால்மருகா.......”(15)**

**“காமன் றனைமுப் புரந்தனை முன்னங் கடிந்தெரித்த**
**தாமன் றருபுதல்வா...................”(30)**

**“மனமான மாயன் மருகா செகண்டி மலைக்கந்தனே”(31)**

**“மானேர் மதிசெஞ் சடையர னீன்றருள் பாலகனே”(36)**

**“தாக்குல வும்புய ராவணன் வைத்த சானகிசிறை**
**நீக்கு மரிதன் மருகா............”(52)**

**“செனகன் மகனென யோத்தியில் வந்து செனித்துமுன்னாட்**
**கனக மிகுவரக் கன்றனை வென்றகண் ணன்மருகா”(80)**

**“நாரண நான்முகன் தேடரி தாய்நின்ற நாதனெங்கும்**
**பூரண மாகிய செஞ்சடை யீசன் புதல்வ...”(83)**

என்றெல்லாம் புகழ்ந்து பாடுகின்றார்.

ஓம் எனும் பிரணவப் பொருளின் தன்மையை வேதத்தின் முடிவை சிவபெருமானுக்கு உரைத்த தன்மையை,

**"பூரண மாய்நின்ற சோதிக்கு மந்திரம் புகலுகின்ற**
**காரணனே............ " (49)**

என்று பாடுகிறார்.

முருகப் பெருமான் அதர்மத்தை அழிக்கும் முகமாக சூரனை அழித்தத் தன்மையைக் குறித்து,

**"கொதிக்குஞ் சினத்த மனத்தவு னோர்கள் குலத்தைவென்ற" (8)**

**"குணங்குடி கொண்ட வலுசூர பன்மனைக் கொன்றயிலா" (9)**

**"வாது தனைச்செயுஞ் சூரபன் மாவை வதைத்தயிலா" (21)**

**"பாகை யணிகன சூரன் றனைவென்று நன்மை வெற்றி" (50)**

**"சந்ததி யேவெகு வல்லமைச் சூரன் தரமதனை**
**முந்ததி ரும்படி வென்றோ..............." (55)**

**"வச்சிர மான யெயிற்சூர பற்பனை மாளமுன்னாள்" (63)**

**"கணிகொண்ட மற்புயச் சூரபற் மாவைத் தகர்த்தயிலா"(98)**

என்றெல்லாம் புகழ்ந்து பாடியுள்ளார்.

முருகப் பெருமான் தம்மிடம் தெய்வானை வீற்றிருக்க வள்ளியின் மீது மையல் கொண்டு தம் மலர்ப்பாதம் நோகும் படியாகக் கானகத்தில் நடந்து திரிந்து மணந்த தன்மையை,

**"தருவார்தெய் வேந்திரன் மகள் தெய் வானைமின் தானிருக்க**
**மருவார் குழற்குற வள்ளியின் மேலதி மையல் கொண்டு**
**திருவார் மலர்ச்சர ணம்நோகக் கானத்திற் சென்றையனே" (19)**

**"மணமாலை யான வனமதில் வாழ்குற வள்ளிக்குமுன்**
**மணமாலை சூடிய சேயா...." (20)**

**"வெயிலே றியயிதட் பூங்காவை நாடி விரும்பிச்சென்று
துயிலே றியசிற் றிடைவள்ளி யைமணந் தோன்றச் செய்த"(23)**

என்று பாடிப்பரவுகிறார்.

வள்ளி தெய்வானையை மணந்து பக்தர்களுக்கு முருகப்பெருமான் அருள் செய்வதை,

**"கயல்சூழும் பார்வைக் குறவள்ளி தன்னைக் கலந்தபுயா"(6)**

**"தகரஞ் செறிந்த குழல்வள்ளி மாதைத் தழுவுபுயா" (7)**

**"சரந்தர மான்விழிக் குஞ்சரி வள்ளி தன்னுடனே" (14)**

**"நுணங்கு மிடைவள்ளி தெய்வானை மேவு நுதிவயிலா"(42)**

**"...தனமிகு வள்ளிதெய் வானை கலந்தபுயா
மையா தயவு புரிவாய் செகண்டி மலைக்கந்தனே" (46)**

என்று பாடியுள்ளார்.

இவ்வாறு அழகிய சிற்றம்பலக் கவிராயர் எளிய சந்தத்தால் முருகப்பெருமானின் பெருமைகளைப்பாடி முருகனிடம் தமக்கு அருள்புரியுமாறும், முருகனை நினைத்தோர்க்கு மட்டுமன்றி நினையாதோர்க்கும் அருள்புரியுமாறும் வேண்டி அமைகிறார்

பாடல் முதற்குறிப்பகராதி பின்னிணைப்பாக இணைக்கப் பட்டுள்ளது.

# பழனியாண்டவர் கலித்துறை

1. அந்த மிகுநவ ரத்னக் கிரீட மணிசென்னியுங்
குந்த மிலங்கிய யீறாறு கையுங் குலுங்கவுமே
கந்த நிறைகடப் பந்தார் புயமுமென் கண்முனமே
வந்தருள் செய்குவை நீயே செகண்டி மலைக்கந்தனே.

2. மஞ்சுல வுங்குஞ் சரிக்காக நீர்முனம் வாதுசெய்யும்
மஞ்சுல வும்புயச் சூரபன் மாவை வதைத்தயிலா
மஞ்சுல வும்விண் ணதிரந டஞ்செய்யு மாமயிலா
மஞ்சுல வும்பொழில் குழுஞ் செகண்டி மலைக்கந்தனே.

3. நானத் தரும்பு முலைத்தெய்வ யானையை நன்னயஞ்சேர்
கானத் தனுதினம் வாழ்குற மாதைக் கலந்தபுயா
பானத் தணிகை யரிமருகா யென்முன் வந்தருள்வாய்
வானத் தளாவுஞ் சிகரச் செகண்டி மலைக்கந்தனே.

4. நாகத்தை யிந்துவைச் சூடிய செஞ்சடை நாதரிடப்
பாகத்தை மேவி வளரம் பிகைதரு பாலகவெந்
தேகத்தைத் துன்பக் கடலில் விழாதருள் செய்குவைநீ
மாகத்தைத் தாவி வளருஞ் செகண்டி மலைக்கந்தனே

5. திண்ண மிகுந்த திரிபுரந் தன்னைச் சிரித்தெரித்த
தண்ண மிகுந்த மதிச்சடை நாதன் தருபுதல்வா
நண்ண மிகுந்த கதிமோட்சம் யாவையு நல்குவைநீ
வண்ண மிகுந்த சேகரச் செகண்டி மலைக்கந்தனே.

6. கயல்சூழும் பார்வைக் குறவள்ளி தன்னைக் கலந்தபுயா
மயல்சூழும் மாதர் வலைக்குட் படாதருள் மாமயிலா
புயல்சூழுங் காவிற் கனிரசம் பரந்து பொலிந்துவிளை
வயல்சூழுந் திவ்ய வளஞ்சூழ் செகண்டி மலைக்கந்தனே.

7. சிகரஞ் செறிந்த கிரவுஞ்சப் பாரச் சிலையதனைப்
பகரஞ் செறிந்த வயிலால்முன் னாள்வென்ற பாவலனே
தகரஞ் செறிந்த குழல்வள்ளி மாதைத் தழுவுபுயா
மகரஞ் செறிந்த கடல்சூழ் செகண்டி மலைக்கந்தனே.

8 கொதிக்குஞ் சினத்த மனத்தவு ணோர்கள் குலத்தைவென்ற
நுதிக்குந்த னேயெனக் கன்பான செந்தமிழ் நூலருள்வாய்
விதிக்கும் பிரமாதிபர் தேவேந்ர தேவரிம் மேதினியோர்
மதிக்குஞ் சிகரஞ் செரியுஞ் செகண்டி மலைக்கந்தனே.

9. தணங்குடி கொண்ட தமிழையென் பால்தரு வாய்முனந்தூர்க்
குணங்குடி கொண்ட வலுசூர பன்மனைக் கொன்றயிலா
மணங்குடி கொண்ட செயமாலை சூடிய வாகையனே
வணங்குடி கொண்ட சேகரச் செகண்டி மலைக்கந்தனே.

10. ஐயம்பு வில்லெடுத் தெய்மாரன் றன்னையன் னாளெரித்த
துய்யம் புலிகொன்றைச் சூடிய செஞ்சடைச் சோதிமைந்தா
செய்யம் புயமின் மருகா யெனக்கருள் செய்குவைநீ
வையம் புகழுஞ் சேகரச் செகண்டி மலைக்கந்தனே

11. கடிவேய்ந்த பைந்துள பத்தா ரணிமலர்கண்ணன்சது
முடிவே தன் தேடி யறியாத வீசற்கு முன்சுருதி
முடிவே யுவாத்தரும் ஞான சொரூப முருகய்யனே
வடிவே யெனக்கருள் செய்வாய் செகண்டி மலைக்கந்தனே.

12 மருவாருஞ் செங்கம லாசன னானபிர் மாவினுக்கும்
பொருவாள் விழியுமை பங்கற்குஞ் சந்தப் புலவனுக்குங்
குருவான ஞான மணியே சமரக் குமரய்யனே
வருவா யடியன் முனீயே சிகண்டி மலைக்கந்தனே.

13. காவார் குறப்பெண் மணவா விண்ணாட்ட(டி)ற் கலந்துவளர்
தேவாதி தேவர் பணிசர ணாவருள் செய்கவின்று
மாவார் சதங்கைக் கலீர்க லீரென மயிற்பரிமேல்
வாவா வடியனான் நீயே செகண்டி மலைக்கந்தனே!13

14. புரந்தரன் போற்றும் புனிதா குகாவிண் புவியனைத்தும்
நிரந்தர மாய்ச்சச் சிதானந்த மாயெங்கு நின்றையனே
சரந்தர மான்விழிக் குஞ்சரி வள்ளி தன்னுடனே
வரந்தர யென்முன் வருவாய் செகண்டி மலைக்கந்தனே.

15. வெயிலொளி தன்னிற் கொடிய வரவணை மேற்றுயின்று
கையிலொளி யேந்திய மால்மருகா உம்பர்க் காவலவா
அயிலா ளிருகன மொழியுள் வள்ளிதெய் வானைபங்கா
மயிலாளி யென்முன் வருவாய் செகண்டி மலைக்கந்தனே.

16. அணியே மிகுந்த கமலா சனத்தி னரியிந்திரர்
பணியே புரிசெஞ் சரணா நன்னீலப் பரிமளப்பூங்
கணியே யணிபன் னிருபுயவா யும்பர்க் காவலவா
மணியே யடியன் முனீயே செகண்டி மலைக்கந்தனே

17. மாகான மாது தனக்காகப் பாதம் வருந்தச்சென்று
யோகான திச்செஞ் சடையான் பாகத் துகந்து(வந்து)வளர்
பாகான திவ்ய மொழியுமை யீன்ற(பாலக) பாவலவா
வாகான தோகை மயிலா செகண்டி மலைக்கந்தனே

18. இந்து தனையணி செஞ்சடை நாதர் இடத்தில்வளர்
பந்து முலையுமை பாலா யெனக்கருள் பாலிப்பாய்மா
நந்து தனைவைகை யரிநான் முகன்(பர)
விண் ணாட்டவர்கள்
வந்து பணியுஞ் சிகரச் செகண்டி மலைக்கந்தனே

19. தருவார்தெய் வேந்திரன் மகள்தெய் வானைமின் தானிருக்க
மருவார் குழற்குற வள்ளியின் மேலதி மையல்கொண்டு
திருவார் மலர்ச்சர ணம்நோகக் கான(க)த்திற்
சென்றையனே
வருவாய் அடியன்முன் னீயே செகண்டி மலைக்கந்தனே

20. மணமாலை யான வனமதில் வாழ்குற வள்ளிக்குமுன்
மணமாலை சூடிய சேயா அதிகவ ரஞ்செய்குவாய்
வணமாலை பாலுமை மாது தருசுக மைந்தபச்சை
வணமாலை மாமுகன் போற்றுஞ் செகண்டி மலைக்கந்தனே

21. வாது தனைச்செயுஞ் சூரபன் மாவை வதைத்தயிலாச்
சூது முலைத்தெய்வ யானைக்கு மாலைமுகன் சூடியவா
தாது மலர்ச்செஞ் சரணா அதிவரந் தந்தருள்பொன்
மாது நிதம்விளை யாடுஞ் செகண்டி மலைக்கந்தனே.

22. திருவே நிகர்குற மாதுபங் காவயன் செப்புமறை
உருவே மெஞ்ஞான வொளியே ஒளியி லுறும்பொருளே
தருவே நினது வடியேற் கதிரவந் தந்தருள்வாய்
மருவே மிகுவளஞ் சூழுஞ் செகண்டி மலைக்கந்தனே.

23. வெயிலே றியயிதட் பூங்காவை நாடி விரும்பிச்சென்று
துயிலே றியசிற் றிடைவள்ளி யைமணந் தோன்றச்செய்த
அயிலே றியபன் னிருகைய னேயெனை யாண்டருள்வாய்
மயிலே றியமயில் வாகா செகண்டி மலைக்கந்தனே.

24. பொருகா மனைவென் றரன்மைந் தாஅருள் புரியென்மன
திருகா வையுமெடுத் தாதரிப் பாய்வெண் டிரையுலவு
குருகாளி மேற்றுயில் மாயனை மேவுங் குமமுலைப்பொன்
மருகா நதிவனஞ் சூழுஞ் செகண்டி மலைக்கந்தனே.

25. பொங்காத வாரிதன் னிற்றுயில் மாயனும் பூவயனும்
முங்காத வாய்ச்சென்று தேடரி தாக முடிந்துநின்ற
கங்கா தரனருள் பாலா வடியன்முன் காணவந்து
மங்காத வாழ்வு தருவாய் செகண்டி மலைக்கந்தனே

26. செந்தா மரைவளர் மாதுக்குங் காவினிற் சேர்பிணைக்கும்
நந்தா தயிந்திரன் தேவியிந் திராணிக்கும் நன்மருகா
மந்தா கினிதந்த சேயா யென்முன்னம் மகிழ்வுடனே
வந்தா தரித்தருள் செய்வாய் செகண்டி மலைக்கந்தனே

27. மாலான சந்தப் புலவனுக் குங்கும்ப மாமுனிக்குஞ்
சேலான பார்வைப்பொன் மேவிய நான்முகத் தேவனுக்கும்
பாலான திங்கட் சடிலர்க்கு மந்திரம் பகர்குமரா
மாலான வள்ளி மணவா செகண்டி மலைக்கந்தனே

28. காமே வியவள்ளி மின்னாளை நானின்று கண்டனென்றே
தேமே வியபுகழ் நாரதன் மாமுனி செப்பினபின்
பூமே வியசெஞ் சரணம் வருந்தப் புனத்திற்சென்றோய்
மாமே வியவாஞ் செவ்வாய் செகண்டி மலைக்கந்தனே

29. ததிக்கும் புவிக்குங் கனிவாய் திறந்துமுன் றானுண்டவரே
விதிக்கும் பிரமரி (பரி)ந்திரா திபரன்பர் மேலவர்கள்
துதிக்குங் கமலச் சரணா வருள்(தா)விண்ணிற்
றோய்ந்துவளர்
மதிக்கு நிகழும் வதனா செகண்டி மலைக்கந்தனே.

30. காமன் றனைமுப் புரந்தனை முன்னங் கடிந்தெரித்த
தாமன் றருபுதல் வாயெனக் கேகிருபை தந்தருள்வாய்
பூமனிந் திராதிபர் தேடரி தான புரவலனே
மாமன் மகிழும் மருகா செகண்டி மலைக்கந்தனே

31. கனமான திங்கட் சடையாளர் பங்கிற் கலந்துவளர்
வனமான கூந்த லபிராமி யீன்றருள் மாமைந்தனே
புனமான மயேந்திர ராசன் புணர்ச்சிவர
மனமான மாயன் மருகா செகண்டி மலைக்கந்தனே

32. சேம மிகுந்த குழலுமை பாகத் தனம்வளர்பூர்
தாம மிகுந்த பவளச் சடாதரன் தந்தமைந்தா
காம மிகுந்த குறவள்ளி மாதைக் கலந்தணையும்
வாம மிகுந்த புயவா செகண்டி மலைக்கந்தனே.

33. குஞ்சரி வள்ளி யிடப்பாக மேவு குகாகடலிற்
துஞ்சரி முப்பது முக்கோடி தேவர் துலங்கயென்றுங்
கஞ்சரி போற்றிய செஞ்சர ணாயெனைக் காத்தருள்வாய்
மஞ்சரி யுற்ற புயவா செகண்டி மலைக்கந்தனே

34. மாலா கியதந்தி மீதேறி மன்மதன் வந்தெய்ததால்
மாலா கியகுழல் சோரத் தவள வளைசரிய
மாலா கியயென் மகன் தனைக்கூடி மருவுமையா
மாலா கியநதி சூழுஞ் செகண்டி மலைக்கந்தனே

35. கதியுற்ற வன்னப் பரியேறி யென்கட் கமலயனுந்
ததியுற்ற கைமிக மாயனுந் தேடிய சங்கரன்றன்
நதியுற்ற செஞ்சடை நாதன்மைந் தாகிருபை நல்குமையா
மதியுற்ற திவ்ய வதனா செகண்டி மலைக்கந்தனே.

36. கானேர் குழலுமை யம்பிகை பாகங் கலந்துவளர்
மானேர் மதிசெஞ் சடையர னீன்றருள் பாலகனே
தேனேர் மொழிக்குற மாதுபங் காவருள் செய்குவைநீ
வானேர் வளருஞ் சேகரச் செகண்டி மலைக்கந்தனே

37. நிலைக்கும்வின் ணோர்கள் தமைவாது செய்யு
நிருதர்குலங்
கொலைக்கு மனுதிநெட் டிலைவயி லானல்ல கொல்லமிகுங்
கலைக்கும் புறமுனி தேசிக நீயெனைக் காத்தருள்வாய்
மலைக்குற வஞ்சிக் கணவா செகண்டி மலைக்கந்தனே

38. சீராய் அரனருள் சேயா நறுமலர்ச் செங்கடப்பந்
தாராய் சரச குறமாது மேவிய சண்முககண்
பாராய் நடன மிகுமா மயில்தனிற் பண்புடனே
வாராய் அடியன்முன் னீயே செகண்டி மலைக்கந்தனே.

39. வேலையை மாமுர சாய்முழக் கிக்கொண்டு வேகமுடன்
சோலையை மேவும் பரியேறி மாரன்முன் தோன்றவந்தென்
பாலையைம் பாணத்தொன் றெய்தானின் மேற்சிந்தை
பற்றினனே
மாலையை நீதந் தருள்வாய் செகண்டி மலைக்கந்தனே.

40. கஞ்சத்தில் வாழுமின் பங்க ளருளனங் கன்பகழி
பஞ்சத்தி லொன்றைச் சிலைதனிற் பூட்டிக்கண்
பார்த்துநின்று
நெஞ்சத்தி லொன்றெய்த மால்தீர யிட்சணம் நீருமெனை
மஞ்சத்தில் கூட வருவாய் செகண்டி மலைக்கந்தனே.

41. கானுற்ற தந்திப் பரியேறி மன்மதன் கன்னல்வில்லிற்
தேனுற்ற மாமலர்ப் பாணத்தைப் பூட்டிச் சினத்துடனே
மீனுற்ற பார்வைமின் னாளையெய் தான்வந்து மேவுமையா
வானுற்ற தோகை மயிலா செகண்டி மலைக்கந்தனே.

42. அணங்குமை பாகம் வளர்சடை யீச னருள்புதல்வா
நுணங்கு மிடைவள்ளி தெய்வானை மேவு நுதிவயிலா
மணங்குளி ரான மலரய னிந்திரன் வானரன்பர்
வணங்கும் பதாம்புய நீயே செகண்டி மலைக்கந்தனே.

43. போதுற்ற நான்முக னிந்திரர் மாதவர் பொன்கருடன்
மீதுற்ற மாயன்முப் பத்துமுக் கோடியின் மேலவர்பால்
சூதுற்ற வீர பராக்கிரம மாகிய சூரன்றன்மேல்
வாதுற்ற வேவை நீயே செகண்டி மலைக்கந்தனே.

44. செங்கையிற் கன்னற் சிலையேந்தி மாரன் சினந்துவந்து
பங்கைய வரம்பை(மு) சேரந்த நாயகி பங்கில்நின்று
கொங்கையை லக்குவைத் தெய்தலி னால்மையல் கொண்டவந்த
மங்கையை மேவ வருவாய் செகண்டி மலைக்கந்தனே.

45. குயிலாள் நிகர்மொழி வள்ளியை மேவு குருபரனே
அபிலா வானிடப் பாகம் வளரு முமைமைந்தனே
அயிலா வதிக வரமேதந் தெந்தனை யாண்டருள
மயிலா வடியன்முன் வாவா செகண்டி மலைக்கந்தனே

46. செய்யாத வேதம் பரவு குகாநற் றிகழ்பொடிசேர்
மெய்யா தமிழ்மு னிக்குமுன் மந்திரம் விளம்பியவேற்
கையா தனமிகு வள்ளிதெய் வானை கலந்தபுயா
மையா தயவு புரிவாய் செகண்டி மலைக்கந்தனே

47. குகனே இந்திராதிபர் கோனே ததியையுண் கோவிந்தன்ம
ருகனே கடம்பை யணிபுய னே(ந)னுதிக் குறவைச்சண்
முகனேமுன் பார்பதி மின்னாட்கு மந்திர மொழியுமையன்
மகனே வடியன்முன் வாவா செகண்டி மலைக்கந்தனே

48. நந்தாத வானைக் கராவாயிற் பட்டு நடுங்குமுன்போய்
முந்தா தரித்திடும் மால்மரு காவதி மோகமதாய்
விந்தா தவனையொப் பாய்வந்து காய்வதற் கீசனருள்
மைந்தா தமியனைச் சேர்வாய் செகண்டி மலைக்கந்தனே

49. நாராணன் நான்முகன் றேடரி தாகிய நாதனெங்கும்
பூரண மாய்நின்ற சோதிக்கு மந்திரம் புகலுகின்ற
காரண னேயெனை யாண்டருள் வாயதி காதற்றெய்வ
வாரண மாது கணவா செகண்டி மலைக்கந்தனே

50. ஓகை யணியு மொயிலா சரவணத் தோங்குகந்தா
தோகை யணிமயில் வாகாமுன் தேவற்குச் சூதுசெய்யும்
பாகை யணிகன சூரன் றனைவென்று நன்மைவெற்றி
வாகை யணியும் புயவா செகண்டி மலைக்கந்தனே

51. தென்னவ னேயருள் வாலைபங் கற்குத் தெரியமந்திரஞ்
சொன்னவ னேமும் மதம்பொழி யுஞ்சிந் துரமுகற்குப்
பின்னவ னேகிருபை செய்வாய் வனம்வளர் பெண்குறத்தி
மன்னவ னேமயில் வாகா செகண்டி மலைக்கந்தனே

52. தாக்குல வும்புய ராவணன் வைத்த சானகிசிறை
நீக்கு மரிதன் மருகாவென் னாளும் நெடியவனங்
காக்குங் குறப்பெண் கணவா மதுர கவியைநிகர்
வாக்கு நடக்க வரந்தா செகண்டி மலைக்கந்தனே

53. பாவல னேயிந் திராதிபர் மேலவர் பண்ணவர்கள்
காவல னேநற் றினைப்புன மேவிய கன்னிகைதன்
நாவல னேமுனஞ் சூரபன் மாவி னகங்குலைக்கும்
மாவல னேயருள் செய்வாய் செகண்டி மலைக்கந்தனே

54. பாலாக நல்ல வமுதாக வேசொற் பயிலுவள்ளி
மேலாக மொன்றும் படியணை மீதினில் மேவிவளர்
கோலாக லாவயிற் பன்னிரு கையுங் குலுங்கவென்முன்
மாலாக நீயும் வருவாய் செகண்டி மலைக்கந்தனே

55. அந்ததி தன்னையுன் மாலயன் றேடு மரனருளுஞ்
சந்ததி யேவெகு வல்லமைச் சூரன் தரமதனை
முந்ததி ரும்படி வென்றோ யெனதுகண் முன்னமிப்போ
வந்ததி வாழ்வு தருவாய் செகண்டி மலைக்கந்தனே

56. தேசா திபரன்பர் யிந்திரா திபருயர் தேவர்பணி
ராசா திபர்மலர் காவினில் மேவிய நங்கைவள்ளி
நேசா திருவர(த)ன் பாலா வதிவர நீயருள்வாய்
வாசா திகழ்மயில் வாகா செகண்டி மலைக்கந்தனே

57. ஒள்ளிய கங்கை யறுகை யணிய முயர்ந்தசடை
வெள்ளிய சலமத னில்வள ரும்விம லன்மைந்தா
புள்ளி மயிற்பிரி யா(நீ) கிருபை புரியுமையா
வள்ளிதெய் வானை மணவா செகண்டி மலைக்கந்தனே

58. பையா ரரவப் பணியா பரணர்தென் பார்ப்பதியின்
மெய்யா ரரனருள் பாலா கிருபை மிகுந்தருள்வாய்
மையார் விழிவள்ளி தெய்வானை மாதை மருவுபுயா
வையார் வடிவயிற் கையா செகண்டி மலைக்கந்தனே

59. மாலை நிகமதிச் செஞ்சடை நாதன்றன் பங்கில்வளர்
சேலை நிகர்விழி மாதுமை யாள்தரு சேயவருள்
மாலை நிகர்குழல் வள்ளிதெய் வானை மருவுபுயா
மாலை நிகர்நுதி வேலா செகண்டி மலைக்கந்தனே.

60. மாவை நிகரும் விழியுமை மாது மகிழுமைந்தா
மாவை மிகுகதிர் வேலா வதிக வரமருள்வாய்
மாவை யனுதினம் மேவிய மாயன் மருகதெய்வ
மாவை மணம்புணர் வேலா செகண்டி மலைக்கந்தனே.

61. தூவியன் மேவிய மேரு கிரிவளர் தூயன்மைந்தா
பாவியன் பாற்சென் றிரக்கா திருக்கருள் பாலிப்பைநீ
காவியன் தாமரை செங்குவ ளைகள் கலந்துவளர்
வாவியன் சூழுஞ் சிகரச் செகண்டி மலைக்கந்தனே.

62. தானவர் மன்ன னெனுஞ்சூர பன்மனைத் தான்செயிற்றோய்
கானவர் தன்குல மின்னாளை மேவுகு காவருள்வாய்
ஞானவர் யோகியர் அன்பர்கள் மூவாநலஞ் சிறந்த
வானவர் போற்றுஞ் சரணா செகண்டி மலைக்கந்தனே.

63. வச்சிர மான யெயிற்சூர பற்பனை மாளமுன்னாள்
தச்சிரவெய்த வயிலா கிருபை தருவையயன்
நச்சிர மேந்து மாறுகு மந்திரம் நவின்றகுகா
வச்சிர பாணி பணியுஞ் செகண்டி மலைக்கந்தனே.

64. தேச மிகுந்த வடியார்கள் போற்றிய செஞ்சரணா
நேச மிகுந்த குறமாது மேவிய நீதவென்னைப்
பாச மிகுந்த பிறப்பில் வராதருள் பாலிப்பைநீ
வாச மிகுந்த கடம்பா செகண்டி மலைக்கந்தனே.

65. மகரந் தழுவுஞ் சரவணப் பொய்கையில் வந்துதிச்ச
சிகரந் தழுவும் பணைமுலை வள்ளியைச் சேர்ந்தபுயா
தகரந் தழுவுங் குழலுமை யீன்றருள் சண்முகவா
மகரந் தழுவுங் கடம்பா செகண்டி மலைக்கந்தனே.

66. அந்தர மேவு மதிச்செஞ் சடைமிகு மண்ணல்பங்கிற்
சுந்தர மேவு முமையீன் றெடுத்த சுதாகுமரா
கந்தர மேவுங் குழல்வள்ளி மாது கணவயென்முன்
வந்தர மேவுந் தமிழ்தா செகண்டி மலைக்கந்தனே.

67. இரைத்தனந் தேந்து மரிமைந்த னென்மங்கை
யையெயிதனாற் (யெய்ததனாற்)
கரைத்தனந் தன்னையுண் ணாள்பக லார்உறங் காள்முனிந்து
துரைத்தனந் தேடுவள் நீரு மனத்தன் னுடங்கலவா
வரைத்தன வள்ளிக் கணவா செகண்டி மலைக்கந்தனே.

68. கங்குல வுந்தக ரக்குழல் மாது கவுரிதன்மெய்ப்
பங்குல வுஞ்செஞ் சடையா னீன்றருள் பாலகவெண்
சங்குல வுங்கை யரிமரு காகிருபை தந்தருள்வாய்
மங்குல வும்பொழில் சூழுஞ் செகண்டி மலைக்கந்தனே

69. பிறையுற்ற வாணுதற் தேவானை மாதும் பிரியமுடன்
நறையுற்ற கூந்தற் குறவள்ளி யும்புணர் நாயகமே
கதையுற்ற மாமிடற் றண்ணல்செந் தாமரைக் கண்ணன்சது
மறையுற்ற நான்முகன் போற்றுஞ் செகண்டி மலைக்கந்தனே

70. திருவா கியமயி லாப்பூரி லங்கத்தைச் செம்மைபெறு
முருவா கியபெண் வடிவாக் கியநல் லுமைமைந்தனே
தருவா கியசெங் காதல னேயருள் தந்தருள்வாய்
மருவா கியமல ரணியா செகண்டி மலைக்கந்தனே

71. பளஞ்சேருஞ் செவ்விதழ்த் தெய்வானைக் காகமுன் பாரில்வளர்
தளஞ்சேருஞ் சூரயி ராக்கத னைவென்ற சண்முகவா
உளஞ்சேருஞ் செந்தமிழ் தன்னையென் பங்கி லுதவுவைநீ
வளஞ்சேருஞ் சோலை புடைசூழ் செகண்டி
மலைக்கந்தனே

72. விண்ணுல வுங்கிர வுஞ்ச கிரியை வெடிபடவே
திண்ணுல வுநுதி வேலால்முன் னாளிற் செயிற்றகுகா
பண்ணுல வுஞ்செந் தமிழ்யா வையும்நிதம் பாடவருள்
மண்ணுல வும்பொய்கை சூழுஞ் செகண்டி
மலைக்கந்தனே

73. நேய மிகுந்த குறவள்ளி மாதுமின் னேர்பவள
வாய மிகுந்ததெய் வானையுங் கூடி மருவுபுயா
தூய மிகுந்தயிந் திராதிபர் கஞ்சத்திற் றோன்றுமயன்
மாய மிகுந்தரி போற்றுஞ் செகண்டி மலைக்கந்தனே

74. சீராரு மாமுக மும்மண மேவிய செங்கடப்பந்
தாராரு மார்பு மயில்வா கன்முந் தமிட்குதவுங்
கூராரு வேலணி பன்னிரு கையுங் குலுங்கவென்முன்
வாரா திருப்பதே னையா செகண்டி மலைக்கந்தனே

75. வீறு படைமனச் சூரபன் மாவைமுன் வேகமுடன்
கூறு படைவடி வேலால்வென் றேவெற்றி கொண்டகுகா
ஆறு படையெனும் வீட்டி லுகந்தவென் னையவருள்
மாறு படைவிழி மாவார் செகண்டி மலைக்கந்தனே

76. மெய்வானை மேவுங் குளிரொளிற் றிங்கள் விளங்குமுகத்
தெய்வானை மேவும் புயவா குகாயெத் தினமுந்திட்டி
செய்வானை மேவுங்கம் வென்றர னார்தரு சேயவருள்
மைவானை மேவு மயிலா செகண்டி மலைக்கந்தனே.

77. தனது சரண்பணி வற்கரு ளீசன் றனக்குமந்திரஞ்
சொனதுவர் வாய்க்குரு தேசிக னேஉயர் தோகையனே
உனதுசத் தப்பரிச ரூப கெந்தத் துடனெனது
மனது குளிர வருவாய் செகண்டி மலைக்கந்தனே

78. அணிகொண்ட மெய்மிகு தெய்வானை மாதுத
னாசையினாற்
கணிகொண்ட மற்புயச் சூரபற் மாவைத் தகர்த்தயிலா
பணிகொண்ட வேணியான் புதல்வா கிருபை பாலிப்பைநீ
மணிகொண்ட பூம்பொழில் சூழுஞ் செகண்டி
மலைக்கந்தனே.

79. மாதங் கமலை யரியருள் மாரன்வில் வாங்கிக்கையில்
மாதங் கமலைய யேறி நடத்திமுன் வந்தேறத்தென்
மாதங் கமலைக் கயிலைபூ வம்பெய்து வருத்தின்சேர்
மாதங் கமலையை நேராஞ் செகண்டி மலைக்கந்தனே

80. செனகன் மகனென யோத்தியில் வந்து செனித்துமுன்னாட்
கனக மிகுவரக் கன்றனை வென்றகண் ணன்மருகா
பனக மதைச்செஞ் சடையி லணியரன் பாலகவென்
மனகங் குளிர வருவாய் செகண்டி மலைக்கந்தனே

81. சரமத னையெடுத் தன்னா ளுரமிகு சத்தமரா
மரமத னைவென்ற சாமள ரூபனா மால்மருகா
சிரமத னையெண் கண்ணாற்குக் கொய்தரன்
சேய்வென்பால்
வரமத னையருள் நீயே செகண்டி மலைக்கந்தனே

82. செங்கைக்கு வாய்த்தபஞ் சாயுத மேந்தி செயமுகுந்தன்
தங்கைக்கு வாய்த்த சடாதர நாதன் றருபுதல்வா
கொங்கைக்கு வாய்த்தநல் வாரை யணியுங் குறத்தியெனு
மங்கைக்கு வாய்த்த கணவா செகண்டி மலைக்கந்தனே

83. நாரண நான்முகன் தேடரி தாய்நின்ற நாதனெங்கும்
பூரண மாகிய செஞ்சடை யீசன் புதல்வனென்ற
காரண னேயெனக் கன்பா யதிக வருள்செய்தெய்வ
வாரண மேவும் புயவா செகண்டி மலைக்கந்தனே

84. கஞ்ச மிகுந்தடஞ் சூழ்மிது லைச்சென கன்னருளும்
வஞ்ச மிகுநய னத்திரு மேவிய மால்மருகா
நஞ்ச மிகுகந் தரத்தர்மைந் தாகிருபை நல்குமென்பால்
மஞ்ச மிகுவள்ளி பாகா செகண்டி மலைக்கந்தனே

85. நந்தய்ய னேம முடன்போற்றி செய்யும் நதிச்சடையோன்
நந்தய்யா னேயெனக் கன்பா யதிகிருபை தன்னையருள்
கந்தய்ய னேகுற மாதுதெய் வானை கலந்தணைசம்
மந்தய்யா னேபொய்கை சூழுஞ் செகண்டி மலைக்கந்தனே

86. குணக்குல வம்புலி தன்னை முடிமிசை கொண்டரற்கும்
வணக்கும்ப மாமுனிக் கும்முப தேசம் வழுத்துககா
தணக்கும்ப மாமுலை வள்ளிபங் காகிருபை தந்தருள்வாய்
மணக்குந் தே(ன)ம் பூம் பொழில் சூழுஞ் செகண்டி
மலைக்கந்தனே

87. மாதவஞ் சூழகம் வனமீ துலவு மருவவள்ளி
நாதவம் பேந்து முலையுமை பாலயின் னாளருள
நீதவம் பேசெய்வ தேதய்ய னேவன்பர் நேமமுடன்
மாதவம் பெற்றவர் போற்றுஞ் செகண்டி மலைக்கந்தனே

88. திரைசேர் கடலிற் றுயில்மா லயன்முனந் தேடறியா
விரைசேர் மலர்க்கொன்றை வேணியர் பாகம் விளங்கிவளர்
புரைசேர் விழியுமை பாலா கிருபை புரியுமையா
மரைசேர் கமலை யுறையுஞ் செகண்டி மலைக்கந்தனே

89. பொற்றா மரையம்பை வேளெய்த தாலெந்தன் பூவைக்கிமின்
னுற்றா தவனையொப் பாய்மதி காயஉடல் நொந்து
நற்றாள் மலரணை யன்னமுண் ணாள்வள்ளி நாயகசேர்
வற்றாத வாரி தடஞ்சூழ் செகண்டி மலைக்கந்தனே

90. தாம மிகுசெஞ் சடையரன் பங்கிற் றழுவிவளர்
தாம மிகுதக ரக்குழல் மாது தருபுதல்வா
காம மிகுகுற வள்ளிதெய் வானைபங் காவருள்வாய்
வாம மிகுபொய்கை சூழுஞ் செகண்டி மலைக்கந்தனே

91. நத்தாவச் சிராயுத யிந்திரர் வானவர் நான்குமறைச்
சுத்தா தவமிகு ஞானிக ளென்றுந் துலங்கவுமே
பத்தா பணிசெஞ் சரணா வதிகிருபை பாலிப்பைநீ
மத்தா மகிழுமை பாலா செகண்டி மலைக்கந்தனே

92. ஈசனை யேமுனந் தியானித் திறைஞ்சி யிலங்குமலர்ப்
பூசனை யேசெயு மால்மரு காயிதட் பூங்கமலை
நேசனை யேசிறை தன்னில்வைத் தாய்யென்மு னீ வருவாய்
வாசனை யேதரு நீபா செகண்டி மலைக்கந்தனே

93. மூளைகள் தான்சித றச்சூர பன்மனை முன்செயிற்றோய்
சூளைகள் மேவிய நீபானின் மேற்கவி சொல்லருள்வாய்
பாளைகள் நீவுங் கமுகி னெட்டிய பசுங்குருத்தை
வாளைகள் தாவும் வயல்சூழ் செகண்டி மலைக்கந்தனே

94. வெள்ளி யசல மதனிலென் னாளும் விளங்கிவளர்
ஒள்ளிய கங்கை சடாதரர் பங்கி லுமைமைந்தனே
புள்ளி மயிலின் பரியா கிருபை புரியுமையா
வள்ளி மருவும் புயவா செகண்டி மலைக்கந்தனே

95. அன்ன நிறைமலர்ப் பொய்கைக் கரையி லமரரசின்
பன்ன மதுகயல் பட்சிய தானதைப் பார்த்திருந்த
நன்னய மானநற் கீரன் சிறையைமுன் னாள்விலக்கும்
வன்ன மிகுகதிர் வேலா செகண்டி மலைக்கந்தனே

96. பணியணி கற்றைச் சடாதர நாதர் பங்கில்வளர்
கணியணி கூந்த லுமைபால காமுனங் காவில்வரும்
அணியணி வள்ளிக் கணவா யெனக்கருள் பாலிப்பைநீ
மணியணி தோகை மயிலா செகண்டி மலைக்கந்தனே.

97. பதிசேரு மாமயி லாப்பூரி லங்கத்தைப் பார்த்தவுடன்
துதிசேரும் பெண்ணுரு வாகமுன் னாளிற் றுலங்கச்செய்த
கதிசேரும் பன்னிரு கையா எனையின்று காத்தருள்வாய்
மதிசேரும் திவ்ய வதனா செகண்டி மலைக்கந்தனே

98. திரைசேருஞ் சத்த சமுத்திரஞ் சூழுஞ் சிறந்ததங்க
வரைசேரும் செஞ்சடை நாதன்மைந் தாயென்முன் வந்தருள்வாய்
தரைசேரும் வாவிகள் தன்னில் வளரிதட் டங்குமலர்
மரைசேரு மாது மருகா செகண்டி மலைக்கந்தனே

99. போதரி வானவ ரிந்திரர் போற்றும் புனிதயெனை
யாதரி வால குமர குருபர வச்சுதனார்
சோதரி வாலை புவனை குமாரிதிரி சூலியுமை
மாதரி மாது புதல்வா செகண்டி மலைக்கந்தனே

100. மாதங் கியபங் கயமலர் மீது வளரரிக்கும்
மாதங் கியகொன்றைத் தாமனுக் குங்கனி வாய்திறந்தே
மாதங் கியமந் திரஞ்சொற் குருதேசிக வந்தருள்வாய்
மாதங் கியமின் புதல்வா செகண்டி மலைக்கந்தனே

கலித்துறை முற்றும்.

# துணைநூற்பட்டியல்


1. இரமேஷ். தி.அ — தமிழில் எழுத்தெண்ணிக்கை யாப்பு மரபுகள், இளவேனில் பதிப்பகம், பள்ளிப்பாளையம், நாமக்கல் மாவட்டம். முதற்பதிப்பு 2011.

2. மகாலட்சுமி. தி, வித்யாதரன். சு.ப (ப.ஆர்கள்) — சுவடியியல் ஆய்வு, ஸ்தபதி பதிப்பகம், தியாகராயநகர், சென்னை – 1.

3. மணிகண்டன். ய (ப.ஆ.) — சி.வை. தாமோதரம் பிள்ளை இயற்றிய கட்டளைக் கலித்துறை (இலக்கண நூல்), விழிகள் பதிப்பகம், சென்னை – 41. முதற்பதிப்பு, திசம்பர் – 2007.

4. அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் மூவருட தமிழ்ச்சுவடி விளக்க அட்டவணை தொகுதி–12, பகுதி–2, சென்னை, 1961.

# பாடல் முதற்குறிப்பகராதி


அணங்குமை (42)

அணிகொண்ட (78)

அணியே (16)

அந்த (1)

அந்ததி (55)

அந்தர (66)

அன்ன (95)

இந்து (18)

இரைத்தன (67)

ஈசனை (92)

ஐயம்பு (10)

ஒள்ளிய (57)

ஓகை (50)

கங்குல (68)

கஞ்ச (84)

கஞ்சத்தில் (40)

கடிவேய்ந்த (11)

கதியுற்ற (35)

கயல்சூழும் (6)

கனமான (31)

காமன் (30)

காமே (28)

காவார் (13)
கானுற்ற (41)
கானோர் (36)
குகனே (47)
குஞ்சரி (33)
குணக்குல (86)
குயிலாள் (45)
கொதிக்குஞ் (8)
சரமத (81)
சிகரஞ் (7)
சீராய் (38)
சீராரு (74)
செங்கைக்கு (82)
செங்கையில் (44)
செந்தா (26)
செய்யாத (46)
செனகன் (80)
சேம (32)
தணங்குடி (9)
ததிக்கும் (29)
தருவார்தெய் (19)
தனது (77)
தாக்குலவும் (52)
தாம (90)
தானவர் (62)
திண்ண (5)
திருவா (70)

திருவே (22)
திரைசேர் (88)
திரைசேருஞ் (98)
தூவியன் (61)
தென்னவ (51)
தேச (64)
தேசாதி (56)
நத்தா (91)
நந்தய்யனே (85)
நந்தாத (48)
நாகத்தை (4)
நாரண (83)
நாரணன் (49)
நானத் (3)
நிலைக்கும் (37)
நேய (73)
பணியணி (96)
பதிசேரு (97)
பளஞ்சேருஞ் (71)
பாலாக (54)
பாவலனே (53)
பிறையுற்ற (69)
புரந்தரன் (14)
பையார் (58)
பொங்காத (25)
பொருகா (24)
பொற்றா (89)

போதரி (99)
போதுற்ற (43)
மகரந் (65)
மஞ்சுல (2)
மணமாலை (20)
மருவாருஞ் (12)
மாகான (17)
மாதங் (79)
மாதங்கி (100)
மாதவஞ் (87)
மாலா (34)
மாலான (27)
மாலை (59)
மாவை (60)
மூளைகள் (93)
மெய்வானை (76)
வச்சிர (63)
வாது (21)
விண்ணுல (72)
வீறு (75)
வெயிலே (23)
வெயிலொளி (15)
வெள்ளி (94)
வேலையை (39)